[2005 செப்டம்பர் 23

27—

பக்தர்களுக்குத் தங்கும் விடுதி

*** 72830—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்குத் தங்கும் விடுதி கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக தற்போது 5 தங்கும் அறைகளும், 3 சிறிய மண்டபங்களும் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. இது தவிர பக்தர்கள் வசதிக்காக 23 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதலாக தங்கும் விடுதிகள் திருக்கோயில் நிர்வாகம்மூலம் கட்டுவதற்கான செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மேலூர் தொகுதியிலுள்ள அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலுக்கு தமிழ்நாட்டில் இருந்து பல இலட்சக்கணக்கான பக்தகோடிகள் வந்து தரிசனம் செய்கிறார்கள். அங்கு சிறப்பு வாய்ந்த தீர்த்தம் ஒன்று இருக்கிறது. அந்தத் தீர்த்தம் ஆடுவதற்காக தமிழ்நாட்டில் இருந்து மட்டுமல்லாமல் பிற மாநிலங்களிலிருந்தும் பல்வேறு பக்தகோடிகள் வந்து தீர்த்தம் ஆடிக் கொண்டிருக்கிறார்கள், தரிசனம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அங்கே தங்குவதற்கு இடமில்லை. அழகர் கோயிலிலிருந்து மதுரை ஏறத்தாழ 30 கிலோ மீட்டர் தூரம் இருப்பதால், அங்கிருந்து தங்கி இங்கு வந்து தரிசனம் செய்வதற்கு பக்தகோடிகள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய இந்த 4½ ஆண்டு ஆட்சிக் காலத்தில் எல்லாத் திட்டங்களையும் மேலூர் தொகுதியில் முழுவதும் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்கள் அம்மா அவர்கள். இந்த

2005 செப்டம்பர் 23]

பக்தகோடிகள் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்து கொண்டிருக்கிறார்கள்; பல்வேறு மாநிலங்களிலிருந்தும், வெளிநாட்டவர்கள்கூட வந்து அந்தத் தீர்த்தம் ஆடி தரிசனம் செய்து கொண்டிருக்கிறார்கள். கள்ளழகர் திருக்கோயிலில் தங்கும் விடுதி கட்டுவதற்கான இடம் அதிகமாக உள்ளது. அந்தக் கோயிலின் மலை அடிவாரத்தில், குற்றாலம், ஊட்டி போன்ற இடத்திலே காட்டேஜ் கட்டினால் எப்படி இருக்குமோ அதேபோன்ற தோற்றம் அங்கே இருக்கிறது. அங்கே கோயிலுக்கு அதிக நிதி வருவாயும் இருந்து கொண்டிருக்கிறது. கோயில் நிதியை வைத்தே காட்டேஜ், தங்குவதற்கு விடுதிகள் கட்டினால் கோயிலுக்கு வருமானம் வரும், பக்தகோடிகளும் தரிசனம் செய்வதற்காக தங்கி, நல்லமுறையில் தரிசனம் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், நம்முடைய அம்மா அவர்களுடைய நல்லாட்சி நடந்து கொண்டிருக்கிற இந்த வேளையில் இந்த ஒரு கோரிக்கையை நிறைவேற்றித்தர முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், பட்டியலைச் சேர்ந்த திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயிலின் ஆண்டு வருவாய் இரண்டு கோடியே 90 இலட்சம் ரூபாய் ஆகும். இத்திருக்கோயிலில் சித்திரைத் திருவிழா மற்றும் ஆடித் தேர்த் திருவிழா ஆகியவை பிரசித்தி பெற்றவையாகும். இத்திருக்கோயிலில் பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக 5 தங்கும் அறைகளும், 3 சிறிய மண்டபங்களும் தற்போது பயன்பாட்டில் இருந்து வருகின்றன. மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின் அடிப்படையில் தற்சமயம் 9.5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கான மண்டபம் ஒன்று கட்டப்பட்டு பணி நிறைவடையும் நிலையில் உள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையினுடைய அடிப்படையில் மீண்டும் 23 இலட்சம் ரூபாய் செலவில் 15 தங்கும் விடுதிகள் கட்டுவதற்கு இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஆர். சாமி.*

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையின்படி தங்கும் அறைகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் கூறியதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா.

திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகப் பிரசித்தி பெற்றதும், ஆயிரம் ஆண்டுகள் பழமையானதுமான தஞ்சை பெரிய கோயில் உள்ளது. அதனைத் தரிசிக்க வருகிற பக்தர்களுக்கு, பார்க்க வருகிற பயணிகளுக்கு இதுவரையிலும் தங்கும் விடுதி வசதி அங்கே இல்லை. தொல்பொருள் துறை பாதுகாப்பில் இல்லாத அரசு இடத்தில் அத்தகைய தங்கும் விடுதியைக் கட்டிட அரசு முன் வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் மூலமாக இருக்கின்ற காரணத்தினால், தமிழக அரசு தலையிடுவதற்குத் தடைகள் இருக்கின்ற காரணத்தினால் . . .

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கென தனியாக விடுதி கட்ட வேண்டிய அவசியம் இல்லை. உலகத் தமிழ் மாநாடு 1995 ஆம் ஆண்டு அங்கே நடைபெற்றபோது ஏராளமான ஓட்டல்கள் புதிதாக அங்கே கட்டப்பட்டன. ஆகவே, பலவிதமான தங்கும் விடுதிகள் தஞ்சாவூரில் ஏற்கெனவே உள்ளதால், புதிதாக விடுதி கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 28, திரு. கா.தி. இளையகண்ணு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

28—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

*** 37446—திரு. கா.தி. இளையகண்ணு:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—